**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி:11.08.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் வி.ஆர்.பூம் சார்ஜ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் 1.06 லட்சம் சதுர அடி பரப்பளவில் நிறுவப்பட்டுள்ளது. இம்மையத்தின் மூலம் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கு இடையே புதுமையான கண்டுபிடிப்புகள் மற்றும் அறிவுசார் தொழில்நுட்பங்களை பரிமாற்றம் செய்வதற்கு வழி வகுக்கும். பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியின் மூலம் உயிரி தொழில்நுட்பவியல், உயிர் தகவலியல், மரபியல், மூலக்கூறு கண்டறிதல், மரபணு தனிமைப்படுத்தல், உயிரணு வளர்ப்பு மற்றும் வேளாண் இடுபொருட்கள் ஆகியவற்றை மேம்படுத்த உதவும்.

இதன் தொடக்கமாக, உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் சார்பாக தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மைய இயக்குனர் முனைவர்.ந.செந்தில் மற்றும் வேளாண் தொழில்நுட்ப நிறுவனமான M/s.வி.ஆர்.பூம் சார்ஜ் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு.ந.மு.விசால் ஆதித்யா ஆகியோர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் பொறுப்பு துணைவேந்தர் முனைவர். இரா. தமிழ்வேந்தன் அவர்கள் முன்னிலையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

M/s. VR BOOM CHARGE LLP (Boom.EV) நிறுவனம் வேளாண் தொழில்நுட்பத் துறையில் தனது பங்களிப்பை விரிவாக்கி, புதிய முயற்சியாக, மின்சாரம் மற்றும் சோலார் உதவியுடன் இயங்கக்கூடிய மினி டிராக்டர்கள், உழவோட்டும் கருவிகள் மற்றும் வேளாண் ட்ரோன்கள் போன்ற அதிநவீன கருவிகளை கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகுக்கிறது.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர உயிரி தொழில்நுட்பத்துறை தலைவர் முனைவர். ஈ. கோகிலாதேவி, பயிர் வினையியல் துறை தலைவர் மற்றும் மற்றும் பேராசிரியர் முனைவர் அ.செந்தில் மற்றும் உயிரி தொழில்நுட்ப மகத்துவ மைய அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*